# கூப் ஹரைசன்

1 March 2023


## கூட்டுறவு நிறுவனங்களுக்கு பட்ஜெட் ஒரு வரப்பிரசாதம்: அமித் ஷா



இந்திய அரசாங்கமானது, 'சஹாகர் சே சம்ரிதி' எனும் மந்திரத்தை பின்பற்றி மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையின் கீழ், கூட்டுறவு நிறுவனங்களின் வாயிலாக கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சரான அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுறவுத்துறையை வலுப்படுத்தும் நோக்கத்தில் 2023ம் ஆண்டின் பட்ஜெட்டில் எடுக்கப்பட்டிருக்கும் புதுமையான முடிவுகள் இந்த உறுதியை அடையாளப்படுத்துகின்றன. உலகின் மிகப்பெரிய, பன்முகத்தன்மை கொண்ட சேமிப்புத்திறனை உருவாக்கும் திட்டம் மூலமாக, கூட்டுறவு சங்கங்களுடன் தொடர்புடைய விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சரியான நேரத்தில் விற்பனை செய்வதின் மூலம் அவற்றுக்கு நல்ல விலையை பெற முடியும். மற்றும் இது விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் தீர்மானத்தில் முக்கியப் பங்கு வகிக்கும்.

அடுத்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு ஊராட்சியிலும் புதிய பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள், முதன்மை மீன்பிடி சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை அரசு நிறுவும். மேலும், 2016-17ம் ஆண்டுக்கு முன்பு விவசாயிகளுக்கு செலுத்திய தொகையை தங்கள் செலவில் காட்ட சர்க்கரை கூட்டுறவு சங்கங்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது, இதன் மூலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு சுமார் ரூ.10,000 கோடி ரூபாய் நிவாரணம் கிடைக்கும். மார்ச் 31, 2024ம் ஆண்டுவரை உருவாக்கப்படும் உற்பத்தி துறையின் கூட்டுறவு சங்கங்களை 15 சதவீத வரி வரம்பில் மட்டுமே வைத்திருப்பதற்காக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் பிரதமருக்கு தனது நன்றியை தெரிவித்தார். முதன்மை வேளாண்மை கடன் சங்கம்(பிஏசிஎஸ்) மற்றும் முதன்மை கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்களுக்கு(பிகார்டுபிக்கள்) பணம் எடுப்பதற்கான டிடிஎஸ் வரம்பை ரூ.3 கோடியாகவும், ஒரு நபருக்கான ரொக்க வைப்பு மற்றும் கடன் தொகையின் வரம்பை ரூ.2 லட்சமாகவும் அறிவித்திருக்கும் முடிவு பாராட்டத்தக்கது.

ஆதாரம்: PIB

## தேசிய அளவிலான பன்மாநில கூட்டுறவு ஏற்றுமதி சங்கம்

மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, 2002 ஆம் ஆண்டின் பல மாநில கூட்டுறவு சங்கங்கள்(எம்எஸ்சிஎஸ்) சட்டத்தின் கீழ், தொடர்புடைய அமைச்சகங்களின் குறிப்பாக வெளியுறவு அமைச்சகம் மற்றும் வர்த்தக துறை, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆகியவற்றின் ஆதரவுடன், அவற்றின் ஏற்றுமதி சார்ந்த கொள்கைகள், திட்டங்கள் மற்றும், 'முழுமையான அரசாங்க அணுகுமுறை'யை பின்பற்றும் ஏஜென்சிகள் மூலமாக, கூட்டுறவுகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை கையாள்வதற்காக தேசிய அளவிலான பல மாநில கூட்டுறவு ஏற்றுமதி சங்கத்தை நிறுவுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த சங்கமானது, ஏற்றுமதியை மேற்கொள்வதற்கும் ஊக்குவிப்பதற்குமான ஒரு ஒன்றிணைந்த அமைப்பாகச் செயல்படுவதன் மூலம் கூட்டுறவுத் துறையிலிருந்து ஏற்றுமதிக்கு ஒரு உந்துதலை வழங்கும். இது உலகளாவிய சந்தைகளில் இந்திய கூட்டுறவுகளின் ஏற்றுமதி திறனை வெளிப்படுத்த உதவும். இந்த சங்கமானது, இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் ஏற்றுமதி தொடர்பான பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பலன்களை 'முழு அரசாங்க அணுகுமுறை' மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் பெறுவதற்கும் கூட்டுறவுகளுக்கு உதவும். மேலும் இது, உறுப்பினர்கள் தங்கள் பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்து சிறந்த விலையை பெறுவதன் மூலமும், உபரியில் இருந்து விநியோகிக்கப்படும் டிவிடெண்டின் மூலமும் பயனடையக்கூடிய கூட்டுறவுகளின் உள்ளடக்கிய வளர்ச்சி மாதிரி மூலமாக 'சஹகர்-சே-சம்ரித்தி' என்ற இலக்கை அடைவதற்கும் உதவும்.

### ஏற்றுமதிகளில் கூட்டுறவு சங்கங்களின் தேவை

- 29 கோடிக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட, 8.54 லட்சம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள்.
- கூட்டுறவு சங்கங்களே ஊரக பொருளாதார மேம்பாட்டுக்கு காரணமான திறவுகோல்களாக இருக்கின்றன.
- அனைத்து பொருளாதார பகுதிகளிலும் தங்கள் அந்நிய செலாவணியை நன்மை தரும் விதத்தில் அமைத்துக்கொள்வதற்காக கூட்டுறவு சங்கங்கள் உலகளவில் சிந்திப்பதோடு, அவை சார்ந்த

பகுதிகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

### ஏற்றுமதி கூட்டுறவு சங்கத்தை அமைப்பதற்கான தூண்டுகோல்

- சர்வதேச சந்தை தேவையை மதிப்பீடு செய்து, கூட்டுறவு பொருட்கள்/சேவைகளின் ஏற்றுமதி திறனை அதிகரித்தல்.
- நாட்டின் ஏற்றுமதியில் கூட்டுறவுகளின் நேரடிப் பங்கு.
- ஏற்றுமதி செய்யக்கூடிய உள்நாட்டு உபரி, செயல்பாட்டு மூலதனம், தளவாடங்கள், தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சி ஆகியவற்றின் ஒருங்கிணைப்புக்கு முறையான நிறுவன ஆதரவை வழங்குதல்.
- கொள்முதல், சேமிப்பு, செயலாக்கம், சந்தைப்படுத்தல், வணிக சின்னம் கொடுத்தல், பெயரிடல், பேக்கேஜிங், சான்றிதழ், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்றவற்றைச் செய்தல் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து வகையான பொருட்கள் மற்றும் சேவைகளை வர்த்தகம் செய்தல்.
- கூட்டுறவு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உபரி பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் ஆத்மநிர்பர் பாரதத்திற்கு வழிவகுக்கும் "மேக் இன் இந்தியா" திட்டத்தை ஊக்குவிப்பது.
- இதன்மூலமாக கூட்டுறவுத் துறையில் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது.

### ஏற்றுமதி சங்கத்தின் நிர்வாகம்

- நான்கு முன்னணி கூட்டுறவு நிறுவனங்களான இப்கோ, கேஆர்ஐபிஹெச்சிஒ, நேபெட், ஜிசிஎம்எம்எஃப் மற்றும் என்சிடிசி ஆகியவை தலா 100 கோடி ரூபாய் பங்களிக்கும்.
- சங்கமானது அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக 2,000 கோடி ரூபாயும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக 500 கோடி ரூபாயும் வைத்திருக்கும்.
- இந்த சங்கம் புது தில்லியில் இயங்கும் பதிவு அலுவலகத்துடன், நாடு முழுவதும் செயல்படும்.
- ஆரம்ப கூட்டுறவுகள் முதல் தேசிய கூட்டுறவுகள் வரை அனைத்தும் சங்கத்தில் இணைவதற்கு தகுதி பெற்றவை.

### ஏற்றுமதி சங்கத்தின் செயல்பாடுகள்

- நாட்டின் கூட்டுறவுத் துறையில் கிடைக்கும் உபரிகளை ஏற்றுமதி செய்வதில் கவனம் செலுத்துதல்.
- இந்திய கூட்டுறவுத் துறையை பரந்த சந்தையை அணுகும் விதத்தில் தயார்படுத்துதல்.
- இந்திய கூட்டுறவு பொருட்கள்/சேவைகளின் தேவையை உலகெங்கிலும் அதிகரித்தல்.

### ஏற்றுமதி சங்கத்தின் அனுகூலங்கள்

- உலகளாவிய சந்தைகளில் இந்திய கூட்டுறவுகளின் ஏற்றுமதி திறனை வெளிப்படுத்துதல்.
- கூட்டுறவுகளின் உள்ளடக்கிய வளர்ச்சி மாதிரியின் மூலம் 'சஹகர்-சே-சம்ரித்தி' இலக்கை அடைதல்.
- பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்வதன்மூலமும்,சமூகத்தால்உருவாக்கப்படும் உபரியிலிருந்து விநியோகிக்கப்படும் டிவிடெண்டின் மூலமும் சிறந்த விலைகளை பெறுதல்.
- இந்த முன்னெடுப்பு மூலமாக கூட்டுறவு சங்கங்களின் 29 கோடி உறுப்பினர்கள் பலனடைவர்.

### ஆர்கானிக் தயாரிப்புகளுக்கான தேசிய அளவிலான கூட்டுறவு சங்கம்

மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, 11 ஜனவரி, 2023 தேதியிட்ட வரலாற்றுத் தீர்மானத்தில், 2002 இன் பல மாநில கூட்டுறவு சங்கங்கள் (எம்எஸ்சிஎஸ்) சட்டத்தின் கீழ் ஆர்கானிக் பொருட்களுக்கான தேசிய அளவிலான கூட்டுறவு சங்கத்தை நிறுவுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. குறிப்பாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம் (எம்/டோனர்) ஆகியவற்றின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் 'முழு அரசாங்க அணுகுமுறையை' பின்பற்றும் ஏஜென்சிகளின் ஆதரவுடன் இந்த சங்கம் அமைக்கப்படவுள்ளது.

"சஹகர்-சே-சம்ரித்தி"யின் நோக்கத்தை நனவாக்கும் விதத்தில், கூட்டுறவுகளின் பலத்தைப் அதிகரித்து, அவற்றை வெற்றிகரமான மற்றும் துடிப்பான வணிக நிறுவனங்களாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் பிரதமர் கவனமாக இருக்கிறார். எனவே, கூட்டுறவு நிறுவனங்கள் உலகளாவிய சிந்தனையோடு உள்நாட்டில் செயல்படுவது அவற்றின் நன்மைகளைப் மேம்படுத்துவதற்கு அவசியமானதாகும்.

எனவே, ஆர்கானிக் துறை தொடர்பான பல்வேறு செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கான ஒரு கூட்டு அமைப்பாகச் செயல்படுவதன் மூலம், கூட்டுறவுத் துறையில் இருந்து ஆர்கானிக் பொருட்களுக்கு உந்துதலை வழங்குவதற்காக, எம்எஸ்சிஎஸ் சட்டத்தின் (2002) இரண்டாவது அட்டவணையின் கீழ் தேசிய அளவிலான கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

### ஆர்கானிக் உணவு சந்தையின் திறன்

- உலக ஆர்கானிக் உணவு சந்தை(2020)யின் மொத்த அளவு ரூ. 10 லட்சம் கோடி.
- இதில் இந்தியா 27 லட்சம் ஹெக்டர் ஆர்கானிக் நிலத்துடன் 4வது இடத்தில் இருக்கிறது.
- உலகின் ஒட்டுமொத்த ஆர்கானிக் உற்பத்தியாளர்களான 34 லட்சத்தில் , இந்தியாவின் பங்களிப்பு 16 லட்சமாக இருக்கிறது.
- உலக ஆர்கானிக் சந்தையில் இந்தியாவின் பங்கு 2.70% மட்டுமே உள்ளது, எனவே இதனை விரிவாக்குவதற்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

### ஆர்கானிக் எதற்காக?

- உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழலின் மீதான அக்கறை அதிகரித்து வருவதால் ஆர்கானிக் பொருட்களின் தேவையும் அதிகரித்துள்ளது.

### இந்தியாவின் ஆர்கானிக் உற்பத்தி திறன்

- இந்தியா அதன் மாறுபட்ட வேளாண் காலநிலைகள் காரணமாக பல்வேறு வகையான ஆர்கானிக் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பெரிய ஆற்றலை வளத்தைக் கொண்டுள்ளது.
- நாட்டின் பல பகுதிகளில், குறிப்பாக, 2016ம் ஆண்டில் முழுமையான ஆர்கானிக் மாநிலமாக அறிவிக்கப்பட்ட சிக்கிமை உள்ளடக்கிய வடகிழக்கு பகுதியில் இயற்கை விவசாயத்தின் மரபுவழி பராம்பரியமானது கூடுதல் சலுகையாக இருக்கிறது.

## ஆர்கானிக் சந்தையில் கூட்டுறவுகள் எதற்காக?

- 29 கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட, பதிவுசெய்யப்பட்ட 8.54 லட்சம் கூட்டுறவுகள்.
- ஆர்கானிக் தொகுதிகள் மற்றும் அதன் முழு விநியோகச் சங்கிலியின் வளர்ச்சிக்காக கூட்டுறவுகளைப் பயன்படுத்தலாம்.

## ஆர்கானிக் சங்கம் – பெரிய கூட்டுறவுகளை மேம்படுத்துதல்

- முன்னணி கூட்டுறவுகளான ஜிசிஎம்எம்எப், என்ஏஎப்இடி, என்சிசிஎப், என்டிடிபி மற்றும் என்சிடிசி ஆகியவை ஆர்கானிக் கூட்டுறவு சங்கத்தை அமைப்பதற்கு அமைச்சகத்தின் முன்முயற்சியை எடுக்க முன் வந்துள்ளன.
- இந்த சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 கோடியாகவும், ஆரம்பகட்டமாக செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.100 கோடியாகவும் இருக்கும்.
- இந்த சங்கம் NDDB, ஆனந்த், குஜராத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்துடன், நாடு முழுவதும் செயல்படும் பகுதிகளை கொண்டிருக்கும்.

## ஆர்கானிக் சங்க அமைப்பு மற்றும் அனுகூலங்கள்

- ஏற்றுமதிக்கான நிறுவன ஆதரவை வழங்குதல், அதாவது, ஒருங்கிணைப்பு, சான்றிதழ், பரிசோதனை, கொள்முதல், சேமிப்பு, செயலாக்கம், பிராண்டிங், லேபிளிங், பேக்கேஜிங், தளவாட வசதிகள், ஆர்கானிக் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் இயற்கை விவசாயிகளுக்கு நிதி உதவி ஏற்பாடு செய்தல்.
- பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்வதற்கு ஏற்ற அங்கீகரிக்கப்பட்ட ஆர்கானிக் சோதனை ஆய்வகங்கள் மற்றும் சான்றிதழ் அமைப்புகள்.
- அமுல் மற்றும் பிற ஏஜென்சிகளின் பிராண்ட் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பைப் பயன்படுத்துதல், அதே நேரத்தில் உலக சந்தையில் ஆர்கானிக் பொருட்களின் அணுகல் மற்றும் தேவையை மேம்படுத்துதல்.
- ஆர்கானிக் உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் ஆர்கானிக் பொருட்களுக்கான பிரத்யேக சந்தை நுண்ணறிவு அமைப்பை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்.
- உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் ஆர்கானிக் பொருட்களின் தேவை மற்றும் நுகர்வு திறனை வெளிப்படுத்துதல்.

## தேசிய அளவிலான பல்மாநில கூட்டுறவு விதை சங்கம்

மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, 2002 ஆம் ஆண்டின் பல மாநில கூட்டுறவு சங்கங்கள்(எம்எஸ்சிஎஸ்) சட்டத்தின் கீழ் தேசிய அளவிலான பல மாநில விதை கூட்டுறவு சங்கத்தை நிறுவி மேம்படுத்துவதற்கான வரலாற்று முடிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. தரமான விதைகளின் உற்பத்தி, கொள்முதல், செயலாக்கம், முத்திரை, லேபிளிங், பேக்கேஜிங், சேமிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்; மூலோபாய ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு; மற்றும் உள்நாட்டு இயற்கை விதைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான அமைப்பை உருவாக்குதல் ஆகிய செயல்பாடுகளை நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள், குறிப்பாக வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்(ஐசிஏஆர்) மற்றும் தேசிய விதைக் கழகம்(என்எஸ்சி) ஆகியவற்றின் திட்டங்கள் மற்றும் 'முழு அரசாங்க அணுகுமுறையை' பின்பற்றும் ஏஜென்சிகளின் உறுதுணையுடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுகள் விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில் நாட்டின் கிராமப்புற பொருளாதார மாற்றத்திற்கான திறவுகோலைக் கொண்டிருப்பதால், 'சஹகர்-சே-சம்ரித்தி'யின் நோக்கத்தை நனவாக்க, கூட்டுறவுகளின் பலத்தைப் பயன்படுத்தி, அவற்றை வெற்றிகரமான மற்றும் துடிப்பான வணிக நிறுவனங்களாக மாற்றுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் கவனமாக இருக்கிறார்.

## விவசாய வளர்ச்சிக்கு தரமான விதை எதற்காக?

- உலகின் மொத்த நிலப்பரப்பில் 2.3% மட்டுமே உள்ள இந்தியா, உலக மக்கள்தொகையில் 17.7 சதவீதத்தை கொண்டிருக்கும் அதன் பரந்த மக்கள்தொகையின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தாக வேண்டும். ஆக, சாகுபடி பரப்பை அதிகரிக்க வாய்ப்பில்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, தரமான விதைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, ஒரு யூனிட் சாகுபடி நிலத்தில் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் முனைப்பு காட்ட வேண்டும்.
- மொத்த உற்பத்தியில் தரமான விதைகளின் நேரடி பங்களிப்பு பயிரைப் பொறுத்து சுமார் 15-20% என்று மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் மற்ற உள்ளீடுகளின் திறமையான நிர்வாகத்துடன் அதை மேலும் 45% வரை உயர்த்தலாம்.

## தரமான விதைகளில் கூட்டுறவுகள் ஏன்?

- நாட்டில் 29 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட 8.54 லட்சம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. விவசாயிகள் விதைகளின் முதன்மை உற்பத்தியாளர்களாகவும் நுகர்வோர்களாகவும் இருப்பதாலும், இந்திய விவசாயிகளில் பெரும்பான்மையானவர்கள் குறைந்தபட்சம் ஒரு கூட்டுறவு நிறுவனத்தில் உறுப்பினர்களாக இருப்பதாலும், இந்த கூட்டுறவுகள் முறையான நிறுவன ஆதரவை வழங்குவதன் மூலம் விரும்பிய விதை மாற்று விகிதம்(எஸ்ஆர்ஆர்) மற்றும் பல்வகை விதை மாற்று விகிதத்தை(விஆர்ஆர்) அடையலாம்.
- இவ்வாறு, பெரிய உறுப்பினர் தளத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவுகளின் பலம், விவசாயிகளிடையே உற்பத்தி, மேம்படுத்தப்பட்ட சோதனை வசதி மற்றும் விதை வகை சோதனைகளின் விரிவாக்கம் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படலாம், இது மகசூல் இடைவெளியைக் குறைப்பதற்கான கருவியாக இருக்கும்.

## விதை சங்கத்தை அமைப்பதற்கான உந்துதல்கள்

- உற்பத்தி, கொள்முதல், செயலாக்கம், பிராண்டிங், லேபிளிங், பேக்கேஜிங், சேமிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் சாத்தியமான அனைத்து சந்தைப்படுத்தல் வழிகளிலும் அதன் சொந்த பிராண்ட் பெயரில் தரமான விதைகளை விநியோகித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள 2002ம் ஆண்டின் பல மாநில கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் தேசிய அளவிலான பல மாநில கூட்டுறவு விதை சங்கத்தை அமைத்து

மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

### விதை சங்கத்தின் நிர்வாகம்

- இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட் (இப்கோ), கிரிஷாக் பாரதி கூட்டுறவு லிமிடெட் (கேஆர்ஐபிஹெச்சிஓ) (தலைமை ஊக்குவிப்பாளர்) மற்றும் இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (என்ஏஎப்இடி) ஆகிய மூன்று முன்னணி தேசிய கூட்டுறவுகளும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் (என்டிடிபி) மற்றும் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (என்சிடிசி) ஆகிய இரண்டு சட்டப்பூர்வ அமைப்புகளுடன் இணைந்து. தலா ரூ.50 கோடி பங்களிப்பதோடு, விதை கூட்டுறவு சங்கத்தின் ஊக்குவிப்பு உறுப்பினர்களாகவும் முடிவு செய்துள்ளன.
- இந்த சங்கம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக ரூ.500 கோடியை கொண்டிருக்கும், மேலும் ஆரம்ப செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக ரூ.250 கோடியுடன் நிறுவப்படும்.
- இது பங்கு மூலதனம், சேர்க்கை மற்றும் பிற கட்டணங்கள், கடன்கள், பண வரவுகள், வணிக ஆவணங்கள், வங்கிகள்/எஃப்ஐகளின் ஓவர் டிராஃப்ட், மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியங்கள், இந்தியாவிலும் வெளிநாட்டிலும், லாபம் ஈட்டும் உறுப்பினர்கள் மற்றும் பிற நிறுவனங்களின் நன்கொடைகள்/பங்களிப்பின் மூலம் நிதி திரட்டும். .
- இந்த சங்கம் அதன் செயல்பாடுகளைத் தொடங்க, விருத்தி வித்துகள்(ஃப்ரீடர் சீட்ஸ்) மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்கு ஐசிஏஆர் ஒப்புக் கொண்டுள்ளது.

### சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் நோக்கம்

- இந்த சங்கமானது அனைத்து வகையான கூட்டுறவு கட்டமைப்புகளையும் மற்றும் எஸ்ஆர்ஆர் மற்றும் விஆர்ஆரை அதிகரிப்பதற்கான அனைத்து வழிகளையும் உள்ளடக்கியதன் மூலம் முதன்மை வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் (பிஏசிஎஸ்), பல்மாநில கூட்டுறவு சங்கங்கள் (எம்எஸ்சிஎஸ்) மற்றும் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் உள்ள கூட்டமைப்புகள் மூலமாக செயல்படும். தரமான விதை சாகுபடி மற்றும் விதை வகை சோதனைகள், ஒரே பிராண்ட் பெயருடன் சான்றளிக்கப்பட்ட விதைகளின் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் விவசாயிகளின் பங்கு இருப்பதையும் உறுதிபடுத்தும்.
- இது நாடு முழுவதும் செயல்படும் பகுதிகளைக் கொண்டிருக்கும். ஆரம்பத்தில், இந்த சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் புதுதில்லியில் இருக்கும்.
- விதை வணிகத்தில் ஆர்வமுள்ள தொடக்கம் முதல் தேசிய அளவிலான அனைத்து நிலைகளிலும் உள்ள கூட்டுறவுகள் இந்த சங்கத்தில் உறுப்பினர்களாக சேரத் தகுதி பெறும்.
- இந்த சங்கமானது அதன் சட்டங்கள் மற்றும் 2002ம் ஆண்டின் எம்எஸ்சிஎஸ் சட்டம் மற்றும் விதிகளின்படி, தலைமை நிர்வாக அதிகாரியின் உதவியுடன், இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படும். மேலும் இது அதன் உறுப்பினர்களுக்குப் பொறுப்பாக இருக்கும்.
- இந்த சங்கமானது, விருத்தி விதைகள்(பிரீடர்), அடிப்படை விதைகள்(பவுண்டேஷன்) மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகள்(சர்ட்டிபைட்) ஆகிய மூன்று தலைமுறை விதைகளின் உற்பத்தி, சோதனை, சான்றிதழ், கொள்முதல், செயலாக்கம், சேமிப்பு, பிராண்டிங், லேபிளிங் மற்றும் பேக்கேஜிங் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலமும், இந்திய அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சகங்களின் பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை 'முழு அரசாங்க அணுகுமுறை' மூலம் கவனமாக பயன்படுத்துவதன் மூலமும் பிஏசிஎஸ் மூலமும் அதன் செயல்பாடுகளைச் செய்யும்.

### சங்கத்தின் அனுகூலங்கள்

- விதை கூட்டுறவு சங்கமானது, 29 கோடி சிறு மற்றும் குறு நில உரிமையாளர் கூட்டுறவு விவசாயிகள், தரமான விதைகளின் உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்தல் மற்றும் பாரம்பரிய இயற்கை விதைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் பலன்களைப் பெறுவதை உறுதி செய்யும். விதைப்பரிசோதனை வசதி மற்றும் பல்வேறு சோதனைகளை மேம்படுத்துவதன் மூலம் இது சாத்தியமாகும்.
- இந்த சங்கம், தரமான விதை உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல், பேக்கேஜிங், சந்தைப்படுத்தல் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் லாபம் அனைத்தையும், சங்கத்தின் விதிகளின்படி இருப்புக்களாகப் பராமரித்த பிறகு, பங்குபெறும் விவசாயி உறுப்பினர்களுக்கு மாற்றிவிடும்.
- தரமான விதைகளை உற்பத்தி செய்தல், பதப்படுத்துதல், சேமித்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவற்றுக்கான கூட்டுறவுகளின் திறன்களை இந்த சங்கம் அதிகரிக்கும், இதன் மூலம் விவசாய உற்பத்தித்திறனை மேம்படும், இது நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் கிராமப்புறப் பொருளாதாரத்தை உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும்..
- இந்த சங்கம் விதை மாற்று விகிதம் மற்றும் பல்வகை மாற்று விகிதத்தை அதிகரிக்க உதவுவதோடு, தரமான விதை சாகுபடி மற்றும் விதை வகை சோதனைகள், கூட்டுறவுகளின் அனைத்து நிலை நெட்வொர்க்கைப் பயன்படுத்தி ஒரே பிராண்ட் பெயரில் சான்றளிக்கப்பட்ட விதைகளின் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் விவசாயிகளின் பங்களிப்பையும் உறுதி செய்யும். தரமான விதைகள் கிடைப்பது, உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும் உதவும்.
- இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் (என்சியுஐ) வெளியிட்டுள்ள தரவுகளின்படி, தோராயமாக 13.30% நேரடி வேலைவாய்ப்பு கூட்டுறவுத் துறை மூலம் உருவாக்கப்படுகிறது. இந்த சங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தரமான விதைகள் நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும், இதன் மூலம் விவசாயம் மற்றும் கூட்டுறவுத் துறையில் அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும். தரமான விதைகளை பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவை இந்தத் துறைகளில் கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்கும், இதன்மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தி, "மேக் இன் இந்தியா" திட்டத்தை ஊக்குவிப்பதோடு, ஆத்மநிர்பர் பாரதத்திற்கும் வழிவகுக்கும்.
- தரமான விதைகளை உற்பத்தி செய்வது, அதிக மகசூல் தரும் விதைகளை(ஹெச்ஒய்வி) பயன்படுத்தி பயிர்களை அதிகமாக உற்பத்தி செய்வது மற்றும் சங்கத்தால் உருவாக்கப்பட்ட உபரியிலிருந்து விநியோகிக்கப்படும் டிவிடென்ட் ஆகியவற்றின் மூலம் உறுப்பினர்கள் பயனடையக்கூடிய கூட்டுறவுகளின் உள்ளடக்கிய வளர்ச்சி மாதிரியின் மூலம் 'சஹகர் -சே -சம்ரிதி '

இலக்கை அடைய முடியும்.

- கிராமப்புறங்களில் உள்ள விவசாய சமூகங்கள், விளிம்புநிலை மற்றும் குறைந்த வருமானம் கொண்ட பிரிவினரைச் சேர்ந்த 29 கோடி கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் இதன்மூலம் பயனடைவார்கள்.

## வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது – சிஎஸ்சிக்கள் வழங்கும் 300 க்கும் மேற்பட்ட இ-சேவைகளை பிஏசிஎஸ் வழங்கவிருக்கிறது



மாண்புமிகு பிரதமரின் கனவான ‘சஹகர் சே சம்ரித்தி’யை நிறைவேற்றும் வகையில், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு எடுக்கப்பட்டு, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் ஆகியோர் முன்னிலையில் முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்களை(பிஏசிஎஸ்), பொது சேவை மையங்கள் (சிஎஸ்சி) வழங்கும் சேவைகளை வழங்கச் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2023 பிப்ரவரி2ஆம்தேதிகையெழுத்தானது..புதுதில்லியில் கூட்டுறவு அமைச்சகம், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், நபார்டு மற்றும் சிஎஸ்சி இ-கவர்னன்ஸ் சர்வீசஸ் இந்தியா லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை இணை அமைச்சர் பி.எல்.வர்மா, கூட்டுறவு அமைச்சகம் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர், கூட்டுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் நபார்டு மற்றும் என்சிடிசி ஆகியோர் கலந்து கொண்டனர்..

கூட்டுறவு அமைச்சர் தனது உரையில், பிஏசிஎஸ் கூட்டுறவு நிறுவனங்களின் ஆன்மாவாக இருந்து, அவற்றை சுமார் 20 சேவைகளை வழங்கும் பல்நோக்கு மையங்களாக செய்திருப்பதால், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று கூறினார். கிராமப்புற மற்றும் விவசாய வளர்ச்சியில் பிஏசிஎஸ் -ன் பங்கு மிகவும் முக்கியமானது என்றும் அவர் கூறினார். இந்த ஒப்பந்தம் அனைவருக்குமே சாதகமான ஒன்று என்று குறிப்பிட்ட அவர், கூட்டுறவு மற்றும் விவசாயிகளை வலுப்படுத்துவதற்கான ஒரு புரட்சிகர நடவடிக்கையாக இது இருக்கும் என்றும், சிஎஸ்சி களின் பயனை நாட்டின் மிகச்சிறிய பகுதிகளுக்கு மிக எளிதாக கொண்டுசெல்ல உதவும் என்றும் குறிப்பிட்டார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், பிஏசிஎஸ் இப்போது சிஎஸ்சி களாக செயல்பட முடியும், இதனுடன், பிஏசிஎஸின் 13 கோடி விவசாயிகள் உட்பட கிராமப்புற மக்களுக்கு 300 க்கும் மேற்பட்ட சேவைகள் கிடைக்கப்பெறும். இது பிஏசிஎஸ் -ன் வணிகச் செயல்பாடுகளை அதிகரித்து, அவற்றை தன்னிறைவு பெற்ற பொருளாதார நிறுவனங்களாக மாற்ற உதவும்; இந்த முன்முயற்சியின் மூலம், வங்கி, காப்பீடு, ஆதார் பதிவு/புதுப்பிப்பு, சட்ட சேவைகள், விவசாய உபகரணங்கள் போன்ற விவசாய.உள்ளீடுகள், பான் கார்டு, ஐஆர்சிடிசி, ரயில், பேருந்து மற்றும் விமான டிக்கெட் தொடர்பான சேவைகள் போன்றவை உட்பட சிஎஸ்சி திட்டத்தின் டிஜிட்டல் சேவா போர்ட்டலில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து சேவைகளையும் பிஏசிஎஸ் இப்போது குடிமக்களுக்கு வழங்க முடியும். மத்திய அரசின் நிதியுதவி பெற்ற பிஏசிஎஸ் கணினிமயமாக்கல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய மென்பொருளானது, பிஏசிஎஸ் கள் சிஎஸ்சி களாக செயல்படுவதற்காக பயன்படுத்தப்படும் என்றும், இது ஒரு பெரிய சாதனையாக இருக்கும் என்றும் மத்திய கூட்டுறவு அமைச்சர் அறிவித்தார். .

ஆதாரம்: பிஐபி

## என்சியுஐ-ல் என்சிபி குழு கூட்டம்: புதிய என்சிபி வரைவு கூட்டுறவு ஆட்சேர்ப்பு வாரியம் மற்றும் கூட்டுறவு தீர்ப்பாயத்தை முன்மொழியலாம்




ஜனவரி 24, 2023 அன்று, என்சிபி குழு, புதிய தேசிய கூட்டுறவுக் கொள்கை (என்சிபி) ஆவணத்தை உருவாக்குவதற்கான தேசிய அளவிலான குழுவின் 6வது கூட்டத்தை, முன்னாள் மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு தலைமையில், என்சியுஐ தலைமையகத்தில் நடத்தியது. தேசிய கூட்டுறவு தணிக்கை மற்றும் கணக்கியல் வாரியம் அல்லது தேசிய கூட்டுறவு தீர்ப்பாயம் மற்றும் தேசிய கூட்டுறவு ஆட்சேர்ப்பு வாரியத்தை அமைப்பது இந்த கூட்டத்தின் சில முக்கியமான பரிந்துரைகளில் அடங்கும். இந்த புரட்சிகரமான யோசனைகள் மற்றும் குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் அனைத்தும் இறுதி செய்யப்பட்ட என்சிபி வரைவில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

என்சியுஐ தலைவர் திலீப் சங்கனி, கேஆர்ஐபிஹெச்சிஓ நிர்வாக இயக்குனர் ராஜன் சௌத்ரி, ஆர்பிஐ மத்திய வாரிய இயக்குனர் சதீஷ் மராத்தே, என்ஏஎப்சியுபி தலைவர் ஜோதிந்திர மேத்தா, வாம்னிகாம் இயக்குனர் ஹேமா யாதவ், என்எப்சிஎஸ்எப் எம்.டி பிரகாஷ் நைக்னாவரே, நபார்டு தலைவர் ஷாஜி கே.வி, உதய்பூர் துத் உட்படன் சகாகரி சங்கின் தலைவர் கீதா படேல் மற்றும் பிற குழு உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

புதிய என்சிபி வரைவானது, நபார்டு வங்கியைப் போலவே செயல்படும் இந்திய தேசிய கூட்டுறவு வங்கியைநிறுவுவதையும்முன்மொழிகிறது. வளர்ச்சி நிதி நிறுவனம், தேசிய கூட்டுறவு பல்கலைக்கழகம், சிறப்பு மையம், தேசிய கூட்டுறவு தணிக்கை மற்றும் கணக்கியல் வாரியம், தேசிய ஏற்றுமதி பல்மாநில கூட்டுறவு சங்கம் போன்றவை வரைவு கொள்கை ஆவணத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. புதிய

என்சிபி 2022 வரைவு, அடுத்த 25 ஆண்டுகளுக்கான அதாவது 2024-2047 வரையிலான வரைபடத்தை வழங்குகிறது. செயல்பாட்டில் உள்ள 2.5 லட்சம் பிஏசி களை கணினிமயமாக்குவது, அவற்றை ஒரு பொதுவான தேசிய தளத்தில் கொண்டு வருவது மற்றும் அனைத்து பங்குதாரர்களுடன் தேசிய கூட்டுறவு தரவுத்தளங்களை ஒருங்கிணைப்பது ஆகியவை செயல்திட்டத்தில் உள்ளன . மேலும் 2047 ஆம் ஆண்டிற்குள், 6 லட்சம் புதிய பிஏசிகள், பால் பண்ணை மற்றும் மீன்வள கூட்டுறவுகளை நிறுவும் திட்டமும் என்சிபி வரைவில் உள்ளது. தவிர, 50 கோடி வாரிய உறுப்பினர்கள் மற்றும் பிறருக்கு பயிற்சி அளிப்பது பற்றியும் பேசுகிறது.

ஆதாரம்: Indiancooperative.com

## காந்திநகரில் பி20 இந்தியா துவக்க சந்திப்பு



3 நாள் பி20 இந்தியா கூட்டம் சமீபத்தில் குஜராத் மாநிலம் காந்திநகரில் நடந்தது. டாக்டர் சந்திரபால் சிங் யாதவ் (தலைவர் ஐசிஏ-ஏபி & தலைவர் கேஆர்ஐபிஹெச்சிஓ), திலீப் சங்கனி (தலைவர் என்சியுஐ & தலைவர் இப்கோ), மற்றும் சாவித்ரி சிங் (துணை தலைமை நிர்வாகி, என்சியுஐ) ஆகியோர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். தற்போது, வளர்ச்சியடைந்த மற்றும் வளரும் உலக நாடுகளின் குழுவான ஜி20 அமைப்பின் தலைவராக இந்தியா உள்ளது. 2023 செப்டம்பரில், 18வது ஜி20 உச்சிமாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. இதற்கு முன்னதாக, பி20 உட்பட ஜி20 முக்கிய குழுக்களின் பல்வேறு கூட்டங்கள் நடைபெற உள்ளன.

பிசினஸ் 20 (பி20) என்பது நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பலதரப்பு அமைப்புகளை உள்ளடக்கிய மிக முக்கியமான அதிகாரப்பூர்வ குழுக்களில் ஒன்றாகும். இந்தியாவின் ஜி20 பிரசிடென்சியின் போது பி20 ஐ வழிநடத்த இந்திய தொழில் கூட்டமைப்பானது(சிஐஐ), ஜிஓஐ ஆல் அதிகாரப்பூர்வமான பி20 செயலகமாக நியமிக்கப்பட்டுள்ளது. பி20 இந்தியா 7 பணிக்குழுக்கள் மற்றும் 2 பணிக்குழுக்கள் மூலம் செயல்படும். ஜி20 குழு அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், கொரியா குடியரசு, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளை உள்ளடக்கியது.

## சி-20 பணிக்குழுவின் வெஃபினாரில் என்சியுஐ பங்கேற்றது

என்சியுஐ-ன் டெபுடி சீஃப் எக்சிக்யூடிவான சாவித்ரி சிங், சி-20 பணிக்குழுவால் 22 ஜனவரி, 2023 அன்று நடத்தப்பட்ட வெபினாரில் பங்கேற்றார். வெபினாரின் முக்கிய கருப்பொருள் "பாலினம் மற்றும் குடிமைச் சமூகத்தில் கவனம் செலுத்தும் தொழில்நுட்பம் & கொள்கைகள். என்சியுஐ-ன் டெபுடி சி.இ இந்தியாவின் கூட்டுறவு இயக்கத்தை அறிமுகப்படுத்தியதோடு, வெற்றிகரமான இந்திய கூட்டுறவு வணிகங்களைப் பற்றியும், அவை 30 கோடி கூட்டுறவு உறுப்பினர்களின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்பதை பற்றியும் விவரித்தார். சி20க்கான முக்கிய கொள்கைச் செய்தியாக, கூட்டுறவுகளின் பங்களிப்புகள் எஸ்டிஜி களை அடைவதில் ஒரு முக்கிய காரணியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் பல்வேறு ஜி20 பணிக்குழுக்களில் உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்றும் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளிலும் இதைப்பற்றி குறிப்பிடப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார். சிவில் 20 (சி20) என்பது ஜி20 இன் அதிகாரப்பூர்வ இணை குழுவாகும். சிவில் சமூக அமைப்புகளுக்கான (சிஎஸ்ஓக்கள்) ஜி20 தளமாக, சி20, அரசாங்கம் அல்லாத மற்றும் வணிகம் அல்லாத குரல்களை ஜி20 தலைவர்களிடம் கொண்டுசேர்க்கிறது. தற்போது, இந்தியா ஜி20ன் தலைவர் பதவியை வகிக்கிறது.

## என்சியுஐ, நிட்கான் லிமிடெட் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது: இது கூட்டுறவு தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க படியாக இருக்கும்

கூட்டுறவு தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக புகழ்பெற்ற வளமான நிறுவனத்துடன் தொடர்பை உருவாக்கிக் கொள்வதற்கான தனது முயற்சிகளைத் தொடர்ந்து என்சியுஐ நிட்கான் லிமிட்டட். உடன் பிப்ரவரி 2, 2023 அன்று என்சியுஐ தலைவர், திலீப் சங்கானி, என்சியுஐ சி.இ டாக்டர். சுதிர் மகாஜன், , மற்றும் நிட்கான் லிமிட்டெட். எம்.டி சத்விந்தர் சிங் ஆகியோர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு மூலம், எஸ்ஹெச்ஜி க்கள் மற்றும் கூட்டுறவுகளின் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்கும், சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்கும், தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களுடன் அதன் இன்குபேஷன் சென்டரை வலுப்படுத்துவதற்கும், பதிவுகளை டிஜிட்டல் மயமாக்குதல், மென்பொருள் மேம்பாடு, பல்வேறு திட்டங்களுக்கான ஐ.டி வன்பொருள் விநியோகம் உள்ளிட்ட ஐ.டி சேவைகளுக்கும்என்சியுஐதொழில்முறைஆதரவைப் பெறும். 1984ம் ஆண்டில் இல் நிறுவப்பட்டதான நிட்கான் லிமிட்டெட் என்பது தகவல் தொழில்நுட்பம் மற்றும் கன்சல்டன்சி சேவைகள், திறன் மேம்பாடு, தொழில்துறை, கல்வி மற்றும் சுகாதாரத்தில் பயிற்சி மற்றும் திறன் கட்டமைப்பு போன்ற பகுதிகளில் பணிபுரியும் ஒரு அரசு நிறுவனமாகும். .

